நாள்: 04.11.2025
O.S. No. 02/2023
பெயர்: பாண்டியன், த/பெ. முருகையன்
வா.சா.3

**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :–**

மருதுவாஞ்சேரி தெற்கு தெருவில் உள்ள சொத்துக்களுக்கு எனக்கும், எனது சகோதரர்களுக்கும் பட்டா வழங்கியுள்ளார்களா என்றால் இல்லை. கணேசன், ஜெயராமன் ஆகியோர் எனது சகோதரர்கள் என்றால் சரிதான். அவர்கள் இருவரும் இவ்வழக்கில் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார்கள் என்றால் சரிதான். இவ்வழக்கை தாக்கல் செய்துள்ள ஐந்துபேரும் சகோதரர்கள் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி நடராஜன் எனது உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் 4–வது அயிட்ட சொத்தை எனது சொத்து என்று கூறியுள்ள சொத்திற்கு நான்கெல்லை என்னவென்றால் தெரியாது. எனது வழக்கறிஞருக்கு சொத்தின் நான்கெல்லை விபரங்களை யார் கூறினார்கள் என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்திற்கு 1–ம் பிரதிவாதி பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. இவ்வழக்கில் வா.சா.1 மற்றும் வா.சா.2 ஆகிய எனது சகோதரர்கள் சாட்சியமளித்த போது நான் நீதிமன்றத்தில் இருந்தேன் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் யார் பெயரில் பட்டா உள்ளது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தேவக்கோட்டை செட்டியார் குடும்பத்தின் பெயரில் பட்டா இருந்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அதை எவ்வாறு எனது சகோதரர் பெயருக்கு பட்டா மாறியது என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. தேவக்கோட்டை செட்டியார் குடும்பத்தை அழைத்து வந்து பணம் கொடுத்து 1–ம் பிரதிவாதி அவர் பெயருக்கு பட்டா மாற்றம் செய்து கொண்டார் என்றால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகளின் குறுக்கு விசாரணையை கேட்டுக்கொண்டு நான் பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு சொத்தின் உரிமையாளர் பெயரில் தடையுறுத்துக்கட்டளை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அரசு சார்பில் எனக்கு நிலம் வழங்கப்பட்டதா என்றால் இல்லை.

M S BHARATHIDHASAN

Digitally signed by M S BHARATHIDHASAN
Date: 2025.11.04 16:24:31 +0530